தினமணி


**இன்றைய வேளாண் செய்திகள்**

## தென் தமிழகத்தில் மழை வாய்ப்பு

**சென்னை,**

வளிமண்டல மேலடுக்கில் ஏற்பட்டுள்ள மாற்றம் காரணமாக தென்தமிழகத்தின் சில இடங்களில் வியாழக்கிழமை (மார்ச் 20) மழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. தென்மேற்கு வங்கக்கடலில் இலங்கை அருகே குறைந்த காற்றழுத்தத் தாழ்வு நிலை ஒன்று அண்மையில் உருவானது. இதன் காரணமாக தமிழகத்தில் மழை பெய்யும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. இந்நிலையில் அந்த தாழ்வு நிலை தற்போது வலுவிழந்துள்ளதாக வானிலை மைய அதிகாரிகள் தெரிவித்தனர். இருப்பினும் வளிமண்டல மேலடுக்கில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் காரணமாக தென்தமிழகத்தில் வியாழக்கிழமை (மார்ச் 20) மழை பெய்யும் என்று வானிலை முன்னறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. சென்னையைப் பொருத்தவரை வானம் மேகமூட்டத்துடன் காணப்படும்.

## பருத்தியில் காய்ப்புழுவை கட்டுப்படுத்தும் முறைகள்...



**திருநெல்வேலி,**

பருத்திச் செடியில் காணப்படும் காய்ப்புழு தாக்குதலை கட்டுப்படுத்துவதன் மூலம் முழுமையான சாகுபடி பெற முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தின் அம்பாசமுத்திரம் நெல் ஆராய்ச்சி நிலைய பூச்சியியல் துறை உதவிப் பேராசிரியர் கு. இளஞ்செழியன் வெளியிட்ட செய்திக்குறிப்பு: திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டங்களில் குறிப்பாக, கோவில்பட்டி வட்டாரத்தில் பருத்தி ரகமானது மானாவாரிப் பயிராகவும், இறவைப் பயிராகவும் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. தற்போது பருத்திச் செடிகளில் உள்ள பூ மொட்டுகள் (சப்பைகள்) உதிர்ந்து காணப்படுகின்றன. பருத்தியை தாக்கும் காய்ப்புழுக்களே இதற்கு காரணம். காய்ப்புழு தாக்குதலால் 30 முதல் 40 சதவிகிதம் வரை மகசூல் இழப்பு ஏற்படுகிறது. இவை பருத்தி தவிர மக்காசோளம், சூரியகாந்தி, பயறு வகைகள், தக்காளி போன்ற 181-க்கும் மேற்பட்ட பயிர்களையும், களைச் செடிகளையும் தாக்குகின்றன. இவை எல்லா மருந்துகளுக்கும், குறிப்பாக செயற்கை பைரித்தாய்டு மருந்துகளுக்கு எதிர்ப்பு தன்மையாகிவிட்டது. இளம்புழுவானது இலைகளை உண்கிறது. வளர்ச்சியடைந்த புழுவானது சப்பைகளையும், காய்களையும் துளையிட்டு உள்ளே உள்ள பகுதிகளை உண்கிறது. இது தனது தலையை மட்டும் உள்ளே நுழைத்து உள்ளே உள்ள பகுதிகளை உண்ணும். உடம்பானது காய்களுக்கு வெளியே தொங்கிக் கொண்டிருக்கும். பாதிக்கப்பட்ட சப்பைகளானது விரிந்திருக்கும். மேலும், செடிகளில் உள்ள பூ மொட்டுகள் (சப்பைகள்) உதிர்ந்துவிடும். தாய் பூச்சியானது மஞ்சள் கலந்த வெண்ணிற முட்டைகளை தனித்தனியாக இலைகளின் மேற்பகுதியிலும், சப்பைகளின் மீதும் இடுகின்றன. முட்டையில் இருந்து வெளியே வரும் புழுவானது பச்சை, மஞ்சள் அல்லது பழுப்பு நிறத்தில் இருக்கும். புழு மண்ணுக்குள் சென்று கூட்டுப்புழுவாக மாறும். கூட்டுப்புழுவில் இருந்து வெளியே வரும் அந்துப்பூச்சியானது பழுப்பு நிறத்தில் இருக்கும். கட்டுப்படுத்தும் முறைகள்: ஒரு ஹெக்டேருக்கு அமெரிக்கன் காய்ப்புழு இனக்கவர்ச்சி பொறி 12 என்ற அளவில் வைத்து அந்துப்பூச்சியை கவர்ந்து அழிக்கலாம். ஒரு ஹெக்டேருக்கு முட்டை ஒட்டுண்ணியான டிரைக்கோகிரம்மா கைலோனிஸ் 6.25 சிசி என்ற அளவில் 15 நாள் இடைவெளியில் விதைத்த 45ஆம் நாள்முதல் மூன்று முறை விட வேண்டும். பூ பூக்கும் பருவத்தில் ஒரு ஹெக்டேருக்கு குளோர்ஆன்ட்ரனிலிபுரோல் 14.5 18.5 சதவிகிதம் எஸ்ஸி 150 மில்லி அல்லது புளுபென்டியமைடு 39.35 எஸ்ஸி 100-125 மில்லி அல்லது இன்டாக்சகார்ப் 14.5 இசி 500 மில்லி அல்லது லூபனூரான் 5.4 இசி 600 மில்லி அல்லது நோவலூரான் 10 இசி 1000 மில்லி

அல்லது குளோர்பைரிபாஸ் 20 இசி 1250 மில்லி என்ற அளவில் கைத்தெளிப்பான் கொண்டு தெளிக்க வேண்டும்.

காய் பிடிக்கும் பருவத்தில் ஒரு ஹெக்டேருக்கு குயினால்பாஸ் 25 இசி 2000 மில்லி அல்லது பைரகுளோபாஸ் 50 இசி 1500 மில்லி என்ற அளவில் தெளிக்க வேண்டும். ஒரே மருந்தினை திரும்ப திரும்ப அடிக்காமல் சுழற்சி முறையில் தெளிக்க வேண்டும்.

அடுத்த பருவத்தில் வயலில் தொடர்ச்சியாக பருத்தி பயிரிடுவதைத் தவிர்க்க வேண்டும். பயிர் சுழற்சி முறையைக் கடைப்பிடிக்க வேண்டும். மறுதாம்பு பயிர் விடுவதை தவிர்க்க வேண்டும். பரிந்துரைக்கப்பட்ட அளவுக்கு அதிகமாக தழைச்சத்து உரம் இடக்கூடாது. பொறிப்பயிராக கேந்திப்பூவை பயிரிட்டு அமெரிக்கன் காய்ப்புழுவின் அந்துப்பூச்சியை கவர்ந்து அதனுடைய முட்டையை சேகரித்து அழிக்க வேண்டும். மேற்கண்ட முறையை பின்பற்றி பருத்திச் செடியில் காய்ப்புழுத் தாக்குதலை கட்டுப்படுத்தலாம்.

**தர்பூசணியில் வாடல் நோய்!**



**விழுப்புரம்,**

வாடல் நோயால் பாதிக்கப்பட்ட தர்பூசணிச் செடி.

தற்போது சாகுபடி செய்யப்பட்டுள்ள தர்பூசணி பயிரில் வாடல் நோயின் தாக்குதல் அதிகம் காணப்படுகிறது. முறையான நடைமுறைகளை கையாண்டு இந்நோயை கட்டுப்படுத்தினால் விவசாயிகள் கூடுதல் மகசூல் எடுக்க முடியும். விழுப்புரம் மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் தர்பூசணி சாகுபடி செய்யப்பட்டுள்ளது. வளர்ச்சி நிலை, பிஞ்சு உருவாகும் நிலை, அறுவடை நிலை என பல்வேறு

நிலைகளில் தர்பூசணி உள்ளது. இப் பயிரில் ஃபியூசேரியம் வாடல் நோய் என்ற பூஞ்சண நோயின் தாக்குதல் பரவலாகக் காணப்படுகிறது.

பாதிக்கப்பட்ட பயிரின் வளர்ச்சிக் குன்றி செடிகள் காய்ந்து விடுவதால் பெருமளவில் மகசூல் இழப்பு ஏற்படுகிறது. இந் நோயின் பூஞ்சணம் மண்ணில் பல ஆண்டுகள் வரை தங்கி தர்பூசணி சாகுபடி செய்யும்போது அதன் வேர்கள் மூலம் உள்புகுந்து பாதிப்பை ஏற்படுத்துகிறது என்று விவசாய வல்லுநர்கள் தெரிவிக்கின்றனர்.

ஃபியூசேரியம் வாடல் நோய் தர்பூசணி பயிரின் எல்லா நிலைகளிலும் தென்படும். இந் நோயின் பொதுவான அறிகுறி, ஒரு பக்க வாடல் என்று அழைக்கப்படும். அதாவது பாதிக்கப்பட்ட செடிகள் முழுமையாக வாடாமல் ஒன்று அல்லது அதற்கும் மேற்பட்ட கொடிகள் மட்டுமே வாடி இருக்கும். இலைகள் துவண்டும், பழுப்பான நிறத்திலும், காய்ந்தது போன்றும் காட்சியளிக்கும்.

வேருக்கு மேல் உள்ள கொடியை வெட்டிப் பார்த்தால் மஞ்சள் மற்றும் பழுப்பு நிறமான திசுக்களை காண முடியும். காய்ந்த செடியின் தண்டுகளில் வெண்மையான பஞ்சு போன்ற இழைகள் தென்படும். வெப்பநிலை 25 முதல் 27 டிகிரி செல்சியஸ் இருக்கும்போது இந் நோயின் அறிகுறி மற்றும் தாக்குதல் அதிக அளவில் இருக்கும்.

இந் நோயை கட்டுப்படுத்துவது குறித்து வானூர் தோட்டக்கலை உதவி இயக்குநர் கு.அன்பழகன் கூறியது: தர்பூசணியில் ஃபியூசேரியம் வாடல் நோயைக் கட்டுப்படுத்த எந்த பூஞ்சணக் கொல்லியும் கிடையாது. பயிர் சுழற்சி முறை, நோய் எதிர்ப்புத் திறன் கொண்ட ரகங்களை சாகுபடி செய்தல் மற்றும் இதர தொழில்நுட்பங்களைக் கடைபிடிப்பதன் மூலமே இந் நோயை கட்டுப்படுத்த முடியும்.

**நோயை கட்டுப்படுத்தும் முறை:** விதைப்புக்கு முன்பு ஒரு கிலோ விதையுடன் 2 கிராம் அளவில் கேப்டான் கலந்து விதை நேர்த்தி செய்ய வேண்டும். ஒரு லிட்டர் நீரில் பெவிஸ்டின் 1 கிராம் (அல்லது) பெனோமில் 1 கிராம் கலந்து நோயின் அறிகுறி தென்படும் செடிகளைச் சுற்றி ஊற்றலாம். சூடோமோனாஸ், ஃபுளூரசன்ஸ் உயிரியல் கட்டுப்பாட்டு காரணி 2.5 கிலோவை 50 கிலோ எருவுடன் கலந்து வயலில் இட்டு நீர் பாய்ச்சலாம்.

இத்தொழில்நுட்பங்களைக் கடைப்பிடிப்பதன் மூலம் ஃபியோசேரியம் வாடல் நோயை கட்டுப்பாட்டில் வைக்கலாம்

மேலும் தர்பூசணி அறுவடை செய்த பின்பு அதே நிலத்தில் தர்பூசணி, சாம்பல் பூசணி, கிர்னி போன்ற பயிர்களை மறுபடியும் சாகுபடி செய்வதை தவிர்த்து வேறு காய்கறி பயிர்களை சாகுபடி செய்ய வேண்டும் என்றார்.

## கள்ளக்குறிச்சி வேளாண் கூட்டுறவு சங்கத்தில் ரூ.1.60 கோடிக்கு பருத்தி விற்பனை

**கள்ளக்குறிச்சி,**

விழுப்புரம் மாவட்டம் கள்ளக்குறிச்சி வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், புதன்கிழமை நடைபெற்ற பருத்திச் சந்தையில், ரூ.1 கோடியே 60 லட்சத்துக்கு பருத்தி விற்பனையானது.

கள்ளக்குறிச்சி வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில், பருத்தி வாரச்சந்தை புதன்கிழமைதோறும் நடைபெற்று வருகிறது. அதன்படி புதன்கிழமை நடைபெற்ற இச்சந்தையில் கடலூர், விழுப்புரம், சேலம், பெரம்பலூர் உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த 814 விவசாயிகள் 8ஆயிரத்து 160 மூட்டை பருத்தியை விற்பனைக்கு கொண்டு வந்தனர். வியாபாரிகள் குவிந்தனர்: இப்பருத்தியை வாங்குவதற்கு விழுப்புரம், மகுடஞ்சாவடி, திருப்பூர், ஈரோடு, கோவை, சத்தியமங்கலம் உள்ளிட்ட பல்வேறுப் பகுதிகளில் இருந்து வியாபாரிகள் அதிகளவில் வந்திருந்தனர். பருத்தியின் தரத்திற்கேற்றவாறு விலை நிர்ணயம் செய்யப்பட்டது.

இந்த வாரம் ரூ.1 கோடியே 60 லட்சத்திற்கு பருத்தி விற்பனை யானது. ஒரு குவிண்டால் எல்.ஆர் ஏ. ரக பருத்தி அதிகபட்ச விலையாக ரூ.5 ஆயிரத்து 9-க்கும், சுவின் ரக பருத்தி ரூ.6 ஆயிரத்து 100-க்கும் நிர்ணயம் செய்யப்பட்டது. கடந்த வாரம் ரூ.ஒன்றரை கோடிக்கு பருத்தி விற்பனையானது குறிப்பிடத்தக்கது.

அடிப்படை வசதிகள் பற்றாக்குறை: கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில், விவசாயிகளுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் பற்றாக்குறை தொடர்கிறது. குறிப்பாக விவசாயிகள் தங்குவதற்கு போதிய இடவசதி இல்லை. இதனால் விவசாயிகள் அலுவலக வளாகத்திலும் மரத்தின் அடியிலும் வெயிலை

பொருட்படுத்தாமல் ஓய்வெடுக்கின்றனர். குடிப்பதற்கு தண்ணீர் இரு பாரல்களில், வெயிலில் வைக்கப்பட்டிருந்தன. வெயில் காலம் என்பதால் கூடுதலாக கொட்டகை அமைத்து கொடுத்தால் விவசாயிகள் தங்குவதற்கு வசதியாக இருக்கும் என்று அவர்கள் தெரிவித்தனர்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**காற்றழுத்த தாழ்வு நிலையால் மழை இல்லை : வெயிலின் தாக்கம் அதிகரிப்பு**

**சென்னை**: வங்கக்கடலில் உருவான, காற்றழுத்த தாழ்வு நிலையால், நேற்று காலை நிலவரப்படி, மழை பதிவாகவில்லை. பெரும்பாலான பகுதிகளில், வெயிலின் தாக்கம் அதிகரித்துள்ளது.

குடிநீர் பஞ்சம் : பருவநிலை மாற்றத்தின் தாக்கம், வெப்பம் அதிகரித்தலில், தொடர்ந்து எதிரொலித்து வருகிறது. பகல் வேளையில், வெப்பத்தின் அளவு அதிகரித்து வருகிறது. சென்னையில், கடந்த சில தினங்களுக்கு முன், 33 டிகிரி செல்சியசாக இருந்த வெப்பநிலை, நேற்று, 35 டிகிரி செல்சியசாக உயர்ந்துள்ளது. இனி வரும் காலங்களில், இது மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளது. அதே நேரம், அதிகாலை வேளையில் நிலவும் குளிர், பகல் வெயில் பிரச்னையை சற்றே தணிக்கிறது. ஏப்ரல், மே மாதங்களில், குளிரின் தாக்கமும் மறைந்து போகும் என்பதால், இந்த ஆண்டு வெயில், உச்ச அளவை தாண்டும் என, கூறப்படுகிறது. ஏற்கனவே, வெப்பத்தின் தாக்கத்தால், ஏரிகளில், தண்ணீர் வற்றி வரும் நிலையில், வரும் நாட்களில், குடிநீர் பஞ்சம் ஏற்பட வாய்ப்புள்ளதாகவும் கருதப்படுகிறது.

தென் தமிழகத்தில்... : இந்நிலையில், கடந்த சில தினங்களுக்கு முன், வங்கக்கடலின் மேல் பகுதியில், வானில், காற்றழுத்த தாழ்வு நிலை உருவானது. தற்போது, இலங்கை அருகில் நிலை கொண்டுள்ள இந்த தாழ்வு நிலை காரணமாக, தென் தமிழகத்தில், ஆங்காங்கே மழைக்கு வாய்ப்புள்ளதாக கூறப்பட்டது. ஆனால், நேற்று காலை நிலவரப்படி, மழை பெய்யவில்லை. காற்றழுத்த தாழ்வு நிலை, இலங்கை அருகில் தொடர்ந்து நீடிப்பதால், தமிழகத்தின் தென்

மாவட்டங்களில், அடுத்த மூன்று நாட்களுக்கு மழை பெய்ய வாய்ப்பு இருப்பதாக, சென்னை வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.

## திருப்பதி செல்லும் மேச்சேரி முருங்கை

**மேட்டூர்**: விலை சரிவால் முருங்கைக்காயை, 20 காசுக்கு கொள்முதல் செய்யும் வியாபாரிகள், விற்பனைக்காக திருப்பதி உள்பட பல்வேறு பகுதிகளுக்கு அனுப்பி வைக்கின்றனர்.

நடப்பாண்டு, சேலம் மாவட்டம், மேச்சேரி சுற்றுப்பகுதியில் உள்ள மல்லிகுந்தம், அரங்கனூர், பள்ளிப்பட்டி, வெள்ளாறு, காளிப்பட்டி, விருதாசம்பட்டி பகுதியில் முருங்கைக்காய் அதிக அளவில் விளைந்துள்ளது. மேச்சேரி சந்தைக்கு நேற்று ஒரே நாளில், 50,000 முருங்கைக்காய் விற்பனைக்கு வந்தது.முருங்கைக்காய்களை வியாபாரிகள் மூட்டையில் அடுக்கி வெளியூர்களுக்கு விற்பனைக்கு அனுப்பி வைத்தனர். முருங்கைக்காய் வியாபாரிகள் கூறியதாவது:மேச்சேரி சுற்றுப்பகுதியில் நடப்பாண்டு முருங்கைக்காய் விளைச்சல் அதிகரித்துள்ளது. இரு வாரத்துக்கு முன், 100 முருங்கைக்காய், 40 ரூபாய்க்கு கொள்முதல் செய்தோம். வரத்து அதிகரித்துள்ளதால், இரு வாரமாக, 100 முருங்கைக்காயை, 20 ரூபாய்க்கு கொள்முதல் செய்கிறோம். வாரம்தோறும், 50,000 முருங்கைக்காய்களை, விவசாயிகள் விற்பனைக்கு கொண்டு வருகின்றனர். மேச்சேரியில் இருந்து திருப்பதி, வேலூர், ஆற்காடு, சித்தூர் உள்பட பல்வேறு பகுதிகளுக்கு விற்பனைக்கு அனுப்பி வைக்கிறோம்.இவ்வாறு அவர்கள் கூறினர்.

## ஆர்வம் : நாட்டு சோள குச்சிகள் தயாரிப்பில்... : வானூர் பகுதி விவசாயிகள் தீவிரம்

**வானூர்**: "தறி' நெய்ய பயன்படும் நாட்டு சோளத்தின் தண்டு குச்சிகள் தயார் செய்யும் பணியில் வானூர் பகுதி விவசாயிகள் ஆர்வமாக ஈடுபட்டு வருகின்றனர்.

வானூர் ஒன்றியம் கரசானூர், பெரும்பாக்கம், டி. பரங்கனி, எறையூர், திருவக்கரை உள்ளிட்ட பகுதியில் பனி காலத்தில் விளைய கூடிய சோளம், கம்பு, தினை, பச்சை பயிர் உள்ளிட்ட பணப் பயிர்களை மானவாரியாக விதைக்கின்றனர்.குறைந்த தண்ணீர்மூன்று மாத பயிரான நாட்டு சோள பயிரும் குறைந்த அளவு தண்ணீர்

பாய்ச்சினால் போதும். மூன்று மாத பயிரான நாட்டு மக்கா சோளம் பத்து முதல் பதினைந்து அடி உயரம் வளரக்கூடியவை. நாட்டு சோளம் நன்கு விளைந்தவுடன் மூன்று மாதம் கழித்து அறுவடை செய்கின்றனர். கதிர்களை மட்டும் அறுவடை செய்துவிட்டு தண்டுகளை நிலத்தில் போட்டுவிட்டு செல்வர். இவற்றை துண்டுகளாக வெட்டி சிலர் மாடுகளுக்கு தீவனமாகவும் தருகின்றனர்.பயன்பாடு

கரசானூர் பகுதியில் பயிரிடப்பட்ட நாட்டு மக்கா சோள கதிர்களை அறுவடைக்கு பின் நிலத்தில் வீணாக உள்ள தண்டுகளை, நில உரிமையாளரிடம் வாங்கி, சில்லரை வியாபாரிகள் வண்டி மூலம் கொண்டுவந்து ஒரு இடத்தில் குவித்து வைக்கின்றனர்.உலர்த்துதல்சோள தண்டு உடையாமல் தண்டு மேல் உள்ள சோலையை கழித்து பின் குச்சிகளை ஒரு அடி துண்டுகளாக வெட்டுகின்றனர். வெட்டிய குச்சிகளை இரண்டு அல்லது மூன்று பாகமாக பிளந்து வெயிலில் காய வைக்கின்றனர். காயவைத்த குச்சிகளை 1000 எண்ணிக்கையில் ஒரு கட்டாக கட்டிவைக்கின்றனர்.வியாபாரிகள் வருகைஆந்திரா, வேலூர், காஞ்சிபுரம் வியாபாரிகள் வானூர் பகுதிக்கு நேரில் வந்து ஒரு கட்டு 1200 முதல் 1800 வரை தரம் பார்த்து நல்ல விலை கொடுத்து வாங்கி செல்கின்றனர். இதனால் கரசானூர் பகுதியை சேர்ந்த விவசாயிகள் நாட்டு மக்காசோள தண்டுகள் தறி நெய்ய பயன்படும் வகையில் குச்சிகளை தயார் செய்யும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

## கவலை : கோலியாஸ் விலை வீழ்ச்சியால் விவசாயிகள்... : அரசு கொள்முதல் நிலையம் அமைக்க வேண்டும்

**கச்சிராயபாளையம்**: கோலியாஸ் கிழங்கின் விலை வீழ்ச்சியால் விவசாயிகள் மிகுந்த ஏமாற்றம் அடைந்துள்ளனர். அரசு சார்பில் கொள் முதல் நிலையம் அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கள்ளக்குறிச்சியை சுற்றியுள்ள கிராமப்புற பகுதிகளில் உள்ள மக்கள் விவசாயத்தை பிரதான தொழிலாக கொண்டுள்ளனர். இப்பகுதியில் விவசாயிகள் பல புதிய பயிர்களை மாற்று பயிர்களாக சாகுபடி செய்து வருகின்றனர்.கோலியாஸ் சமீப காலமாக கூர்கன் கிழங்கு எனப்படும் கோலியாஸ் பயிரிடுவதில் விவசாயிகள் அதிகளவில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

கோலியாஸ் 6 மாதத்தில் அறுவடைக்கு தயாராகிவிடும். இது வளர குறைந்த அளவு தண்ணீர் போதுமானது. மழை குறைவான வறண்ட நிலத்திலும், மணல் பாங்கான

இடத்திலும் நன்கு வளர்ந்து பலன் தரக் கூடியது. இதனால் இப்பகுதியில் விவசாயிகள் அதிகளவில் பயிர் செய்கின்றனர்.தமிழகத்தில் விழுப்புரம், சேலம், திருவண்ணாமலை உள்ளிட்ட 20 மாவட்டங்களில் கோலியாஸ் பயிர் செய்யப்படுகிறது. கள்ளக்குறிச்சி, சின்னசேலம், கச்சிராயபாளையம், சங்கராபுரம் சுற்றியுள்ள பகுதிகளில் அதிகளவில் கோலியாஸ் சாகுபடி செய்து வருகின்றனர்.

மருத்துவ குணம்

கோலியாஸ் சிறந்த மருத்துவ குணம் கொண்ட தாவரமாகும். இது உடல் எடையை குறைக்கவும், உடலில் உள்ள கொழுப்புகளை குறைக்கவும், இதயத்தின் ரத்த ஓட்டத்தை சீராக வைத்திருக்கவும், கணையம், கிட்னி ஆகியவற்றிற்கு தேவையான மருந்துகள் மற்றும் அழகு சாதன பொருட்கள் தயாரிக்கவும் பயன்படுகிறது.

தமிழகத்தில் பயிரிடும் கோலியாஸ், அமெரிக்கா, ஜெர்மனி, இங்கிலாந்து போன்ற நாடுகளுக்கு ஆண்டுக்கு ஆயிரம் டன்களுக்கு மேல் ஏற்றுமதியாகிறது. கோலியாஸ் தாவரத்தில் இலை முதல் கிழங்கு வரை அனைத்தும் மருத்துவ குணம் கொண்டதால் விவசாயிகளுக்கு நல்ல லாபம் கிடைக்கிறது. ஏக்கர் ஒன்றுக்கு 4-8 டன் மகசூல் கிடைப்பதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

விவசாயிகள் தாங்கள் சாகுபடி செய்த கோலியாஸ் கிழங்குகளை ஏஜன்ட்கள் மூலம் தனியாருக்கு விற்கின்றனர். விவசாயிகளிடம் வாங்கும் கிழங்குகள் உலர்த்தி பதப்படுத்தி பெங்களூருக்கு அனுப்பப்படுகிறது.சென்ற ஆண்டு கோலியாஸ் கிழங்கு ஒரு டன் 40 ஆயிரம் ரூபாயும், தண்டு பகுதி 2 ஆயிரம் ரூபாய் வரை விலை கிடைத்தது. ஆனால் இந்த ஆண்டு ஒரு டன் கிழங்கு 8 ஆயிரம் ரூபாயும், தண்டு பகுதி ஆயிரம் ரூபாய்க்கும் விற்கப்படுகிறது.

சென்ற ஆண்டை விட இந்த ஆண்டு டன் ஒன்றுக்கு 32 ஆயிரம் ரூபாய் குறைந்துள்ளதால் விவாசாயிகள் மிகுந்த ஏமாற்றமடைந்துள்ளனர். கோலியாஸ் சாகுபடி செய்ய ஒரு ஏக்கருக்கு 15 ஆயிரம் ரூபாயும், அறுவடை பணிக்கு ஆள் கூலி, வண்டி வாடகை உட்பட 10 ஆயிரம் ரூபாய் செலவாகிறது.தற்போது கிடைக்கும் விலை தாங்கள் செலவு செய்த தொகை கூட கிடைக்கவில்லை என விவசாயிகள் வருத்தம் தெரிவிக்கின்றனர். அதிகளவில் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் கோலியாஸ் கிழங்கினை விவசாயிகளிடமிருந்து நேரடியாக கொள்முதல் செய்ய தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**கோடை வெயிலின் தாக்கத்தால் அணைகளில் தண்ணீர் இருப்பு குறைவு**

**மஞ்சூர்** : கோடை வெயில் தாக்கம் அதிகரிப்பால் மின் உற்பத்திக்கு பயன்படும் அணைகளில் தண்ணீர் இருப்பு குறைந்து வருகிறது. நீலகிரி மாவட்டத்தில் செயல்பட்டு வரும் மின் நிலையங்கள் மூலம் நாள்தோறும், 833 மெகாவாட் மின் உற்பத்தி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மின் உற்பத்திக்கு முக்கிய அணையாக கருதப்படும் அப்பர்பவானி, அவலாஞ்சி, எமரால்டு உள்ளிட்ட அணைகளில் இருப்பில் இருந்த தண்ணீர் மின் உற்பத்திக்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது. கடந்தாண்டு நவம்பர் மாதத்திலிருந்து நடப்பாண்டு மார்ச் மாதம் வரைக்கு பனிபொழிவு தென்பட்டது. இதனை தொடர்ந்து, தற்போது கோடை வெயில் தாக்கம் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதால் அணைகளில் இருப்பில் உள்ள தண்ணீர் படிப்படியாக குறைந்து வருகிறது. இதனால், வரும் நாட்களில் மின் உற்பத்தியில் பாதிப்பு ஏற்படும் சூழல் உருவாகி வருகிறது. மின் வாரிய வட்டாரங்கள் கூறுகையில்,"மின் உற்பத்திக்கு போதுமான அளவு தண்ணீர் தற்போது இருப்பதால், இது வரைக்கு மின் உற்பத்தியில் எவ்வித தடையும் இல்லை. அதே சமயத்தில் நடப்பாண்டுக்கான கோடைமழை குறித்த காலத்தில் பெய்தால் பிரச்னையில்லை'என்றனர்.

நீலகிரி மாவட்டத்தில் உள்ள அணைகளின்

தண்ணீர் இருப்பு விவரம் :( அணையின் அடி- தண்ணீர் இருப்பு)

1.முக்குறுத்தி -18-10.5

2.பைக்காரா -59-45

3.சாண்டிநல்லா -49-29.5

4.கிளன்மார்கன் -33-25

5.மாயார் -17-15.5

6.அப்பர்பவானி -210-158.9

7.பார்சன்ஸ்வேலி-77-45.4

8.போர்த்தி மந்து -130-105.3

9.அவலாஞ்சி -171-100.5

10.எமரால்டு -184- 110.5

11.குந்தா -89-87

12.கெத்தை -156-148

13.பில்லூர் -242-225

சாரல் மழை


**கொடைக்கானல்** : கொடைக்கானலில் நேற்று மாலை 4.45 முதல் 5.30 மணி வரை கோடை மழை பெய்தது. போட்கிளப்பில், 0.3 மி.மீ., ஆக பதிவானது. தாண்டிக்குடி மலைப்பகுதியில் நேற்று மாலை சாரல் மழை பெய்ததது. தொடர்ந்து கடந்த சில தினங்களாக வாட்டி வதைத்த வெயிலுக்கு மத்தியில் வறண்ட வானிலை நீடித்தது. வனப்பகுதிகளும் தீ பற்றி எரிந்த வந்த நிலையில் வனத்துறையினர் போராடி தீயை அணைத்துக்கொண்டிருந்தனர். நேற்று மாலை 4 மணியளவில் பெய்த சாரல் மழையால் வனப்பகுதியில் தீ மேலும் பரவாமல் தடுக்கப்பட்டது.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

நுகர்வு குறைவால்

**கறிக்கோழி விலை சரிவு: கிலோ ரூ.126க்கு விற்பனை**



**கோவை:** கறிக்கோழி நுகர்வு குறைந்ததால் அதன் விலை தொடர்ந்து சரிந்து வருகிறது. தமிழகத்தில் கோவை, திருப்பூர் மாவட்டங்களில் உள்ள கறிக்கோழி பண்ணைகள் மூலம் கறிக்கோழி உற்பத்தி செய்யப்படுகிறது. இங்கிருந்து தமிழகத்தின் பல்வேறு பகுதிகளுக்கும், வெளிமாநிலங்களுக்கும் கறிக்கோழி விற்பனைக்கு அனுப்பப்படுகிறது. கறிக்கோழி விலையை உற்பத்தியாளர்கள் தினமும் முடிவு செய்து அறிவிக்கின்றனர். இந்த மாத துவக்கத்தில் பண்ணை விலை உயிருடன் கிலோ ரூ.67 ஆகவும், சில்லரை விலை உயிருடன் கிலோ ரூ.89

ஆகவும், உரிக்காத கறி ரூ.125 ஆகவும், தோல் உரித்த கறி ரூ.134 ஆகவும் நிர்ணயிக்கப்பட்டது. கடந்த 3 வாரத்தில் கறிக்கோழி விலை தொடர்ந்து குறைத்து நிர்ணயிக்கப்பட்டது. நேற்றைய பண்ணை விலை உயிருடன் கிலோ ரூ.62 ஆகவும், சில்லரை விலை உயிருடன் கிலோ ரூ.84 ஆகவும், தோல் உரிக்காத கறி ரூ.118 ஆகவும், தோல் உரித்த கறி ரூ.126 ஆகவும் நிர்ணயிக்கப்பட்டது. கோடை காலத்தில் நுகர்வு குறைவாக இருக்கும் என்றாலும், அதன் விலையை சரியாமல் இருக்க பொதுமக்களின் தேவையை விட உற்பத்தியை குறைப்பது வழக்கம்.

இந்த ஆண்டும் வழக்கம்போல் உற்பத்தியை குறைக்க உற்பத்தியாளர்கள் முடிவெடுத்தனர். ஆனால், கோடை வறட்சி காரணமாக கோவை, திருப்பூர் மாவட்டங்களில் குடிநீர் பற்றாக்குறை ஏற்பட்டு, கறிக்கோழி பண்ணைகளுக்கு தேவையான குடிநீர் கிடைக்காமல் 10 ஆயிரத்திற்கு மேற்பட்ட பண்ணைகள் மூடப்பட்டுள்ளன. அதன் மூலம் கறிக்கோழி உற்பத்தி தானாக குறைந்தது. இது விலை உயர்வுக்கு சாதகமாக இருக்கும் என்று உற்பத்தியாளர்கள் கருதினர். ஆனால், பொதுமக்களின் கறிக்கோழி நுகர்வு, வழக்கத்தை விட வெகுவாக குறைந்ததால் விலையை குறைத்து நிர்ணயிக்க வேண்டிய நிலைக்கு உற்பத்தியாளர்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

## வரத்து குறைவால் இஞ்சி விலை உயர்வு



**சேலம்:** சேலம் மார்க்கெட்டிற்கு கர்நாடக மாநிலம் குடகு, கேரளா, ஏற்காடு உள்ளிட்ட இடங்களில் இருந்து இஞ்சி விற்பனைக்கு வருகிறது. ஆடி மாதத்தில் புதிய இஞ்சி வரத்து அதிகளவில் இருக்கும். பொதுவாக பழைய இஞ்சிக்கு அதிக

வரவேற்பு இருக்கும். கடந்த சில நாட்களாக மார்க்கெட்டிற்கு இஞ்சி வரத்து குறைந்துள்ளது. இதனால் கடந்த ஒரு மாதத்தில் இஞ்சி விலை கிலோவிற்கு ரூ.15 வரை அதிகரித்துள்ளது. கடந்த மாதத்தில் ரூ.3,700க்கு விற்பனையான 60 கிலோ கொண்ட மூட்டை, தற்போது ரூ.4,800க்கு விற்கப்படுகிறது. கடந்த ஒரு மாதத்தில் மட்டும் மூட்டைக்கு ரூ.1,100 வரை அதிகரித்துள்ளது. சில்லறை விற்பனையில் கடந்த மாதத்தில் ரூ.80 வரை விற்ற ஒரு கிலோ இஞ்சி, தற்போது கிலோ ரூ.95 முதல் ரூ.100 வரை விற்கப்படுகிறது. இனிவரும் நாட்களில் இஞ்சி விலை மேலும் அதிகரிக்கும் என கூறப்படுகிறது.

**பருவமழை ஏமாற்றியதால் வறண்டு போன மணிமுக்தா அணை**

**கள்ளக்குறிச்சி,** : விழுப்புரம் மாவட்டம் கள்ளக்குறிச்சி அருகே உள்ளது மணிமுக்தா அணை. இந்த அணைக்கு கல்வராயன்மலையில் உள்ள மணி மற்றும் முக்தா என்ற இரண்டு ஆற்றில் இருந்து வரும் நீரை சேமிக்க இந்த அணை கட்டப்பட்டது. இதன் மூலம் பழைய பாசன நிலம் 5,500 ஏக்கரும், புதிய பாசன நிலம் 5,200 ஏக்கரும் பாசன வசதி பெறுகிறது.

15 கிலோமீட்டர் நீளத்திற்கு உள்ள பாசன கால்வாய் மூலம் 15 கிராம விவசாயிகள் பயனடைந்து வருகின்றனர். கடந்த ஆண்டு நவம்பர், டிசம்பர் மாதத்தில் போதிய மழை பெய்யாததால், அணை நிரம்புவதில் சிக்கல் ஏற்பட்டது. இதனால் விவசாயிகள் விவசாயத்தை விட்டு, கூலிதொழிலுக்கு செல்லும் அவல நிலை ஏற்பட்டது. மேலும் பலர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மணிமுக்தா அணையின் முழு கொள்ளளவான 36 அடியில் 31 அடிக்கு மட்டுமே தண்ணீர் சேமிக்க முடியும். தற்போது 17 அடி தண்ணீர் மட்டுமே உள்ளது. இதனால் இந்த ஆண்டு விவசாயத்திற்கு தண்ணீர் திறந்து விடப்படவில்லை. கடந்த 2012 நவம்பர் மாதம் அணையில் குறைந்த அளவே தண்ணீர் இருந்த போதும், விவசாயிகளுக்கு தண்ணீர் 2013 ஜனவரி மாதம் வரை திறந்து விடப்பட்டது.

தற்போது அணையில் தண்ணீர் போதிய அளவில் இல்லாததால் கடந்த நவம்பர், டிசம்பர் மாதத்தில் திறக்கப்பட வேண்டிய அணை திறக்கப்படவில்லை. இதனால் இந்த ஆண்டு சம்பா நெல் சாகுபடி குறைந்தது. கிணறு, ஆழ்துளை

கிணறு போன்றவற்றை நம்பியே விவசாயிகள் விவசாயம் செய்து வருகின்றனர். பலர் கூலிவேலைக்கு செல்கின்றனர். பெரும்பாலான விவசாய நிலங்கள் தரிசாக கிடக்கிறது.

**கால்நடை, கோழி, மீன்பண்ணை வைக்க சுயவேலைவாய்ப்பு பயிற்சி பெற அழைப்பு**

**ஈரோடு**, : தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மைய தலைவர் யசோதை வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: இந்திய பொருளாதாரத்தில் கால்நடை உற்பத்தி பொருட்களாக பால், முட்டை மற்றும் இறைச்சியின் பங்களிப்பு அதிகரித்து வருகிறது. கால்நடை பொருட்களின் தரத்தை உலகத்தர நிர்ணய குறியீடுகளுக்கு இணையாக உற்பத்தி செய்ய வேண்டியது நம்முடைய கடமை. இதற்கான தொழில்நுட்ப முறைகளை கால்நடை, கோழி மற்றும் மீன்பண்ணை தொழிலில் மேற்கொள்ள வேண்டும். இதற்கான கால்நடை, கோழி, மீன் பண்ணைகளின் பராமரிப்பு மற்றும் பிற தொழில்நுட்பங்களை கற்று அறிந்து திறமை பெற்றவர்களை உருவாக்கும் வகையில் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் சார்பில் ‘‘சுய வேலைவாய்ப்பு பயிற்சி‘‘ வழங்கப்பட உள்ளது. அதன்படி சுயவேலைவாய்ப்பு பயிற்சியின் கீழ் செம்மறியாடு வளர்ப்பு பற்றி பயிற்சி பெற விரும்புவோர் ஈரோடு வீரப்பன்சத்திரத்தில் இயங்கி வரும் தமிழ்நாடு கால்நடை மருத்துவ பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தின் தலைவர் யசோதையை நேரிலோ அல்லது 0424-2291482 என்ற தொலைபேசி எண்ணிலோ தொடர்பு கொள்ளலாம்.

தமிழில் எழுதப்படிக்க தெரிந்த 18 வயது பூர்த்தியடைந்த அனைவரும் இப்பயிற்சியில் சேரலாம். பயிற்சி கட்டணமாக ரூ.500 செலுத்தி ஒரு மாதம் பயிற்சி பெற்று கொள்ளலாம்.

மேலும் புதிதாக அறிமுகப்படுத்தியுள்ள 18 வகையான செயல் திறன் மேம்பாட்டு பயிற்சிகள் மற்றும் 14 வகையான சுயவேலைவாய்ப்பு பயிற்சிகள் பற்றிய விபரங்களை பெற விரும்புவோர் ‘‘தொலைநிலை கல்வி இயக்குநர், தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம், மாதவரம் பால்பண்ணை

வளாகம், சென்னை-51'', என்ற முகவரிக்கு தபாலில் அல்லது 044-25554411 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொண்டு தகவல் பெற்று பயனடையலாம். இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**சர்வதேச மந்தநிலையால் தேயிலை ஏற்றுமதி 13.24% குறைந்தது**



சர்வதேச சந்தைகளில் தேவைப்பாடு குறைந்துள்ளதால், நடப்பு நிதி ஆண்டின் முதல் 11 மாதங்களில் (ஏப்ரல் – பிப்ரவரி) இந்தியாவின் தேயிலை ஏற்றுமதி மதிப்பு அடிப்படையில் 13.24 சதவீதம் சரிந்து 69.56 கோடி டாலராக குறைந்துள்ளது. இது சென்ற ஆண்டின் இதே காலத்தில் 80.18 கோடி டாலராக இருந்தது. நிதி ஆண்டின் தொடக்கத்தில் ஏற்றுமதி மிகவும் குறைந்ததே இதற்கு காரணமாகும்.

பாகிஸ்தான்

இந்நிலையில், தற்போது பாகிஸ்தானில் தேயிலைக்கான தேவைப்பாடு அதிகரித்து வருகிறது. இந்திய தேயிலை ஏற்றுமதிக்கு இது சாதகமான அம்சமாகும்.

ஏனென்றால் சர்வதேச அளவில் தேயிலை இறக்குமதி செய்வதில் அந்நாடு மூன்றாவது இடத்தில் உள்ளது.

பாகிஸ்தானின் தேயிலை நுகர்வு 22 கோடி கிலோவாக உள்ளது. மேலும் ஈரான் மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகளிலும் தேயிலைக்கான தேவைப்பாடு அதிகரித்துள்ளது. இதனை உறுதிப்படுத்துகின்ற வகையில் பிப்ரவரி மாதத்தில் தேயிலை ஏற்றுமதி 12.36 சதவீதம் அதிகரித்து 5.77 கோடி டாலரிலிருந்து 6.49 கோடி டாலராக அதிகரித்துள்ளது.

எனவே வரும் மாதங்களிலும் இந்திய தேயிலை ஏற்றுமதி அதிகரிக்க வாய்ப்புள்ளது. சென்ற 2012–13–ஆம் நிதி ஆண்டில் அளவின் அடிப்படையில் தேயிலை ஏற்றுமதி 21.62 கோடி கிலோவாக இருந்தது.

அந்த நிதி ஆண்டில் உற்பத்தி 113.50 கோடி கிலோவாக இருந்தது. ஆக, உற்பத்தியாகும் தேயிலையில் சுமார் 20 சதவீதம் மட்டுமே ஏற்றுமதி செய்யப்படுகிறது. நம் நாட்டில் தேயிலை நுகர்வு அதிகமாக உள்ளதே இதற்கு காரணமாகும். நடப்பு நிதி ஆண்டின் முதல் 10 மாதங்களில் (ஏப்ரல்–ஜனவரி) உற்பத்தி 113.76 கோடி கிலோவாக உயர்ந்துள்ளது. எனவே நடப்பு நிதி ஆண்டில் தேயிலை உற்பத்தி சென்ற ஆண்டைக் காட்டிலும் அதிகரிக்கும்.

<u>உற்பத்தி</u>

நாட்டின் தேயிலை உற்பத்தியில் அசாம் மற்றும் மேற்கு வங்காளம் ஆகியவற்றின் பங்களிப்பு அதிக அளவில் உள்ளது.

தென்னிந்தியாவில் தேயிலை உற்பத்தியில் கேரளா மற்றும் தமிழ்நாடு ஆகிய மாநிலங்கள் முன்னிலையில் உள்ளன. சர்வதேச அளவில் தேயிலை உற்பத்தியில் நம் நாடு இரண்டாவது இடத்தில் உள்ளது.

அதே சமயம் நுகர்வில் முதல் இடத்தில் உள்ளது. காமன்வெல்த் நாடுகள், இங்கிலாந்து, ஈராக் மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் ஆகிய நாடுகள் இந்தியாவின் முக்கிய தேயிலை ஏற்றுமதி சந்தைகளாகும்.

**பூதப்பாடி ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் ரூ.9 லட்சத்துக்கு விவசாய விளைபொருட்கள் ஏலம்**

**அம்மாபேட்டை,**

பூதப்பாடி ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் ரூ.9 லட்சத்துக்கு விவசாய விளைபொருட்கள் ஏலம் போனது.

**கொப்பரை தேங்காய்**

அம்மாபேட்டை அருகே உள்ள பூதப்பாடி ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் விவசாய விளைபொருட்கள் ஏலம் நடைபெற்றது. இந்த ஏலத்துக்கு அம்மாபேட்டையை சுற்றி உள்ள கிராமங்களில் இருந்து வந்திருந்த விவசாயிகள் விவசாய விளைபொருட்களை கொண்டு வந்திருந்தனர்.

2 ஆயிரம் தேங்காய்கள் கொண்டு வரப்பட்டு இருந்தன. இதில் சிறிய தேங்காய் 6 ரூபாய்க்கும், பெரியதேங்காய் 15 ரூபாய்க்கும் என மொத்தம் 19 ஆயிரத்து 778 ரூபாய்க்கு ஏலம் போனது. கொப்பரை தேங்காய் 43 மூட்டைகள் கொண்டு வரப்பட்டு இருந்தன. இது குவிண்டால் குறைந்தபட்ச விலையாக 7 ஆயிரத்து 625 ரூபாய்க்கும், அதிகபட்ச விலையாக 8 ஆயிரத்து 5 ரூபாய்க்கும் என மொத்தம் 55 ஆயிரத்து 503 ரூபாய்க்கு விற்பனையானது.

**நிலக்கடலை**

நெல் மொத்தம் 89 மூட்டைகள் கொண்டு வரப்பட்டு இருந்தன. இதில் பொன்னி ரகம் குவிண்டால் குறைந்தபட்ச விலையாக 1,723 ரூபாய்க்கும், அதிகபட்ச விலையாக 1,869 ரூபாய்க்கும் விற்பனையானது. ஏ.டி.டி. ரகம் குவிண்டால் குறைந்தபட்ச விலையாக 1,384 ரூபாய்க்கும், அதிகபட்ச விலையாக 1,438 ரூபாய்க்கும் என மொத்தம் 96 ஆயிரத்து 745 ரூபாய்க்கு ஏலம் போனது.

நிலக்கடலை 345 மூட்டைகள் கொண்டு வரப்பட்டு இருந்தன. இதில் நிலக்கடலை (பச்சை) குவிண்டால் குறைந்தபட்ச விலையாக 1,640 ரூபாய்க்கும், அதிகபட்ச விலையாக 2 ஆயிரத்து 400 ரூபாய்க்கும் விற்பனையானது. நிலக்கடலை(காய்ந்தது) குவிண்டால் குறைந்தபட்ச விலையாக 3 ஆயிரம்

ரூபாய்க்கும், அதிகபட்ச விலையாக 3 ஆயிரத்து 900 ரூபாய்க்கும் என மொத்தம் 3 லட்சத்து 68 ஆயிரத்து 848 ரூபாய்க்கு ஏலம் போனது.

**துவரை**

மக்காச்சோளம் 58 மூட்டைகள் கொண்டு வரப்பட்டு இருந்தன. இது குவிண்டால் குறைந்தபட்ச விலையாக 1,122 ரூபாய்க்கும் அதிகபட்ச விலையாக 1,259 ரூபாய்க்கும் என மொத்தம் 68 ஆயிரத்து 932 ரூபாய்க்கு விற்பனையானது. வெள்ளை எள் 35 மூட்டைகள் கொண்டு வரப்பட்டு இருந்தன. இது குவிண்டால் குறைந்தபட்ச விலையாக 12 ஆயிரத்து 169 ரூபாய்க்கும், அதிகபட்ச விலையாக 13 ஆயிரத்து 879 ரூபாய்க்கும் என மொத்தம் 2 லட்சத்து 87 ஆயிரத்து 575 ரூபாய்க்கு விற்பனையானது. துவரை 3 மூட்டைகள் கொண்டு வரப்பட்டு இருந்தன. இது குவிண்டால் சராசரி விலையாக 3 ஆயிரத்து 169 ரூபாய்க்கு என மொத்தம் 2 ஆயிரத்து 692 ரூபாய்க்கு விற்பனையானது. விவசாய விளைபொருட்கள் மொத்தம் 9 லட்சத்து 73 ரூபாய்க்கு ஏலம் போனது.

**மேல்மலையனூர் பகுதியில் மிளகாய் சாகுபடி செய்வதில் விவசாயிகள் ஆர்வம்**



**மேல்மலையனூர்,**

மேல்மலையனூர் பகுதியில் மிளகாய் சாகுபடி செய்வதில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

**<u>மிளகாய் சாகுபடி</u>**

மேல்மலையனூர் பகுதியில் இந்த ஆண்டு பருவமழை முற்றிலும் பொய்த்துப் போனது. இதனால் ஏரிகளில் நீரின்றி வறண்டு காணப் படுகின்றன. அதேபோல் கிணற்றிலும் நிலத்தடி நீர் மட்டம் குறைந்துபோய் விட்டது. இருந்தாலும் விவ சாயிகள் சோர்ந்து போகாமல் கிணற்றை தூர்வாரி இருக்கின்ற தண்ணீரை பயன்படுத்தும் வகையில் குறுகிய காலப் பயிர்களை சாகுபடி செய்து வருகின்றனர்.

தற்போது கோடை காலம் நெருங்கி வருவதால் அதன் தன்மைக்கேற்ப விளையும் மிளகாய் பயிரிடுவதில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

மேல்மலையனூர் அருகே கொடுக்கன்குப்பம், சிறு தலைப் பூண்டி, தாழங்குணம் மற்றும் இதன் சுற்றுப்புற கிராமங்களில் தற்போது மிளகாய் சாகுபடி செய்யப் பட்டு வருகின்றன. இதுகுறுகிய கால பயிராக இருப்பதாலும், வெளிச்சந்தையிலும், உள்ளூரி லும் பச்சை மிளகாயாக விற் பனை செய்து வருகின்றனர். மேலும் இது பழுத்த பிறகு காய வைத்து மிளகாய் வற்றலாகவும் விற்கின்றனர். பச்சை மிளகாயாக விற்பனை செய்வதைவிட வற்றல் மிளகாயாக விற்பனை செய்வதால் கூடுதலாக லாபம் கிடைப்பதாக விவசாயிகள் கூறுகின்றனர்.

**கள்ளக்குறிச்சி பருத்தி சந்தையில் ரூ.1 கோடிக்கு பருத்தி விற்பனை**



**கள்ளக்குறிச்சி,**

கள்ளக்குறிச்சி பருத்தி சந்தையில் ரூ.1 கோடிக்கு பருத்தி விற்பனை நடைபெற்றது.

**<u>பருத்தி சந்தை</u>**

கள்ளக்குறிச்சி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் புதன் கிழமை தோறும் பருத்தி வாரச்சந்தை நடைபெற்று வருகிறது. நேற்று நடைபெற்ற சந்தைக்கு கள்ளக்குறிச்சி, ரிஷிவந்தியம், விருகாவூர், நாகலூர் மற்றும் கடலூர், பெரம்பலூர் மாவட்டங்களை சேர்ந்த 814 விவசாயிகள் 8,160 பருத்தி மூட்டைகளை விற் பனைக்கு கொண்டு வந்த னர்.

இவற்றுக்கு தேனி, அன்னூர், கோவை, சத்தியமங்கலம், மகுடஞ்சாவடி, திருப்பூர், ஆத்தூர், விழுப்புரம் உள்பட பல்வேறு பகுதிகளில் இருந்து வந்திருந்த 30 வியாபாரிகள் விலை நிர்ணயம் செய்தனர்.

**<u>ரூ.1 கோடிக்கு விற்பனை</u>**

பருத்தியின் தரத்துக்கு ஏற்ப ஒரு குவிண்டால் எல்.ஆர்.ஏ. ரக பருத்தி அதிகபட்சமாக ரூ.5,009-க்கும், குறைந்த பட்ச மாக ரூ.4,710-க்கும், சுவின் ரக பருத்தி அதிகபட்ச மாக ரூ.6,369-க்கும், குறைந்த பட்ச மாக ரூ.5,600-க்கும் கொள் முதல் செய்யப்பட்டது. நேற்று ஒரே நாளில் ரூ. 1 கோடியே 60 லட்சத்துக்கு பருத்தி விற்பனை நடை பெற்றது.

**கோமாரி நோய் தடுப்பூசி முகாம்**

**வி.கைகாட்டி,**

அரியலூர் மாவட்டம் சுண்டக்குடி கால்நடை மருந்தகத்துக்கு உட்பட்ட பெரியதிருக்கோணம் ஊராட்சி செட்டிதிருக் கோணம் கிராமத்தில் கோமாரி நோய் தடுப்பூசி முகாம் 6–வது சுற்று நடைபெற்றது.முகாமில் 729 கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போடப் பட்டது. முகாமை அரியலூர் மாவட்ட மண்டல இணை இயக்குனர் டாக்டர் செல்வ பெருமாள்,சென்னை தலைமை அலுவலக உதவி இயக்குனர் டாக்டர் அழகு வேல் அரியலூர் மற்றும் உடையார்பாளையம் உதவி இயக்குனர்கள் டாக்டர் பாஸ்கரன், டாக்டர் மருதராஜ் கொண்ட குழுவினர்

ஆய்வு செய்தனர்.ஆய்வுக்கு பின் கோமாரி பற்றிய விழிப்புணர்வு மக்களுக்கு எடுத்துரைக்கப் பட்டது.

கோமாரி தாக்கத்தினால் பால் உற்பத்தி குறையும், 50சதவீத கன்றுகள் இறக்க நேரிடும், 4 சதவீத மாடுகள் இறக்க நேரிடும். சினை தடைபடும், எருது மாடுகளின் வேலைதிறன் குறையும்,எனவே ஒவ்வொரு வருடமும் தவறாமல் தடுப்பூசி போட்டுக்கொள்ள வேண்டும் என்பது பற்றிய துண்டு பிரசுரங்கள் வினியோகம் செய்யப்பட்டது. மேலும் தடுப்பூசி போட்ட பின் ஒவ்வொருவருக்கும் எப்.எம்.டி. தடுப்பூசி அட்டை வழங்கப்பட்டது.இந்த முகாமில் சுண்டக்குடி கால் நடை உதவி மருத்துவர் டாக் டர் ரமேஷ்,கால்நடை பரா மரிப்பு உதவியாளர்கள் குமார்,பிச்சைப்பிள்ளை மற்றும் பயிற்சி கால்நடை ஆய்வாளர்கள் கலந்து கொண்டனர்.